களப்பணியில் மக்களோடு மக்களாக வாழ்ந்தவர்!

தஞ்சை மண்ணில் கழகத்தின் தூணாக விளங்கியவர்!

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.இராமச்சந்திரன் மறைவு குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ.3-

"தஞ்சை மண்ணில் கழகத்தின் தூணாக விளங்கியவர் எம். இராமச் சந்திரன் அவர்கள்" என்று அவரது மறைவு குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தஞ்சை மண்ணில் கழகத்தின் தூணாக விளங்கிய எம். இராமச்சந் திரன் அவர்கள் மறைந்த செய்திய றிந்து மிகவும் வருந்தினேன்.

எம்.ஆர். என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட எம்.இரா மச்சந்திரன் அவர்கள், களப்பணி யில் மக்களோடு மக்களாக வாழ்ந்த வர். புல்லட் வண்டியில் சென்று, வயல்வெளிகளில் நின்று மக்களின் குறைகளைக் கேட்டவர்; அவற்றுக் குத் தீர்வுகாணச் சட்டமன்றத்தில் வாதாடியவர்.

1989 மற்றும் 1996ஆம் ஆண்டு தேர்தல்களில் திருவோணம் தொகு தியிலும், 2016ஆம் ஆண்டு தேர்



தலில் ஒரத்தநாடு தொகுதியிலும் வென்று சட்டமன்ற உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றியவர். 2016 2021 காலகட்டத்தில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நான், அவரது சட்டமன்றப் பேச்சு களை ஆழ்ந்து கவனித்து வியந்திருக் கிறேன்.

கள்ளங்கபடமற்ற பேச்சுக்குச் சொந்தக்காரர்!

கள்ளங்கபடமற்ற பேச்சுக்குச் சொந்தக்காரரான அவர், தேர்ந்த வழக்கறிஞராகவும் இருந்து, எளிய மக்களுக்குத் தேவையான சட்ட உதவிகளையும் செய்து வந்தவர்.

தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு அவர் என்னை வந்து சந்தித்துபோது வருந்திய அவருக்கு நம்பிக்கை யளித்து வழியனுப்பி வைத்தேன். இனி அந்த அன்பு முகத்தைக் காண முடியாதே என்கிற ஏக்கமும், அவர் நம்மைவிட்டுப் பிரிந்த துயரமும் ஒரு சேர வாட்டுகின்றன.

தஞ்சை மண்ணில் கழகத்தை வளப்படுத்தியவர்!

செயல்வீரராக இருந்து தஞ்சை மண்ணில் கழகத்தை வளப்படுத் திய எம்.இராமச்சந்திரன் அவர்களது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவ ரைப் பிரிந்து வாடும் அவரது குடும் பத்தினர், கழக உடன்பிறப்புகள், உறவினர்கள், நண்பர்கள் உள் ளிட்ட அனைவருக்கும் எனது ஆறு தலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்

குலசேகரப்பட்டினம் புதிய ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து

ஏப்ரலில் முதல் ராக்கெட் விண்ணில் ஏவப்படும்!

இஸ்ரோ தலைவர் நாராயணன் பேட்டி!



சென்னை, நவ.3- குலசேகரப்பட்டினம் புதிய ராக்கெட் ஏவு தளத்தில் இருந்து வரும் மார்ச் அல்லது ஏப்ரலில் முதல் ராக்கெட் விண் ணில் ஏவப்படும் என இஸ்ரோ தலைவர் நாரா யணன் கூறினார். இஸ்ரோ தலைவர் நாரா யணன் நேற்று, பெங்களூ ருவில் இருந்து விமானத் தில் சென்னை வந்தார். அப்போது அவர் செய்தி யாளர்களுக்கு அளித்த பேட்டி: இந்தியாவின் வழிகாட்டி செயற்கைக் கோள் திட்டம் மகத் தான வெற்றியைப் பெற் றுள்ளது.

இந்த வழிகாட்டுதல் செயற்கைக்கோள் துல்லி யமான நேரம் மற்றும் இருப்பிடத்தை கண்டறி தல் ஆகியவற்றுக்கு இந்த தொழில்நுட்பம் மிகவும் அவசியமானது. இதன் மூலம் பொதுமக்களின் பாதுகாப்பு, விமான நிலையங்களில் விமானங் கள் தரையிறங்குவது மற் றும் புறப்படுவது, கப்பல் களின் போக்குவரத்து, ரயில்களின் இயக்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கு இந்த தொழில்நுட்பம் பயன் படும்.

இந்தியாவிடம் 56 செயற்கைக்கோள்கள் உள்ளன. இருப்பினும், நாட்டின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும், பல்வேறு தகவல்களை கண்டறிந்து கண்காணிப்பதற்கும், ஆயிரக்கணக்கான செயற் கைக்கோள்கள் தேவைப் படுகின்றன. இந்தியா வின் மனித விண்வெளிப் பயண திட்டமான ககன் யான் திட்டம், சிறப்பான முறையில் முன்னேறி வருகிறது. இதுவரை இத் திட்டத்திற்காக சுமார் 8,000 பரிசோதனைகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

விண்வெளிக்கு மனி தர்களை அனுப்புவதற்கு முன்னதாக, ஆளில்லா விண்கலங்களை அனுப் பிச் சோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான முதல்கட்ட ஏவுதல் பணிகள் வெற்றி கரமாக நடைபெற்று வரு கின்றன. ஆளில்லா விண் கலச் சோதனைகளை தொடர்ந்து, மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பு வதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும். சந்திரயான்4 மற்றும் சந்தி ரயான்5 ஆகிய திட்டங்க ளுக்கான பணிகளும், தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, சந்திர யான்4 திட்டத்தை 2028ம் ஆண்டு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. நிலவு தொடர்பான ஆராய்ச்சிகளை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில், இத் திட்டங்களுக்கான பணி கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விண்வெளி மற்றும் சூரியன் தொடர் பான அறிவியல் ஆய்வு கள் மூலம், இதுவரை சுமார் 37 டெராபைட் அளவிலான தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த அறிவியல் தரவு கள், செய்த ஆராய்ச்சியா ளர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் இணையதளத் தில் வெளியிடப்பட்டுள் ளன. தூத்துக்குடி மாவட் டம் குலசேகரப்பட்டி னத்தில் புதிய ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணிகள் வேகமாக நடை பெற்று வருகின்றன. இந்த ஏ வு த ள த் தி லி ரு ந் து அடுத்த ஆண்டு அதாவது 2027ம் ஆண்டு மார்ச் அல் லது ஏப்ரல் மாதத்தில் முதல் ராக்கெட் விண் ணில் ஏவப்படும். இதற் கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின் றன.

இவ்வாறு நாராயணன் கூறினார்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; தேனி சிறையிலிருந்து 17 பேர் தப்பிச்சு போனவங்க, ஒருவழியா மாட்டிக்கிட்டாங்க. நம்ம போலீஸ் திறமைசாலிகள் தான். அவங்களப் பாராட்டித் தான் ஆகணும். என்ன சொல்ற!

பட்டணம் : ஆமாமய்யா; நிச்சயம் பாராட்டணும். இப்ப திடீர்னு ஒரு தகவல். டி.வி.நியூஸ்லே கேட்டேன்.தப்பிச்சிப் போனவங்க 17 பேர் இல்லியாம்.21 பேராம். தப்பிச்சுப் போனவங்கள்ளே ஒருத்தர் மீனாட்சி சுந்தரம்ங்கரவர் வெளியிட்ட வீடியோ பதிவுல இருக்காம். அப்பன்னா இன்னும் நாலு பேரு யாரு? எங்க இருக்காங்க? பார்ப்போம் செய்தி உண்மைன்னா, என்ன நடக்குதுன்னு?

தீபாவளியின் போது தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு! வானிலை மையம் தகவல்!

சென்னை, நவ.3-

முரசு புயல் காரணமாக மாலை முதல் காற்றின் வேகம் அதிகரிக்கும் என சென்னை வானிலை மைய இயக்குனர் துரை தகவல் தெரிவித் துள்ளார். இதுகுறித்து பேட்டியளித் துள்ள அவர் முரசு புயல் காரணமாக இன்று மாலை முதல் நாளை காலை வரை காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும் என்றார். வடகடலோர பகுதிகளில் மீனவர்கள் இன்றும், நாளையும் கடலுக்குச் செல்ல வேண் டாம் என்றும் அறிவுறுத்தி உள்ளார்.

முரசு புயல் கரையை கடக்கும் போது மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் காற்று வீசும். இந்த புயல் கரையை கடக்கும் போது வட மாவட்டங்களில் மழை அதிகமாக இருக்கும் என்றார். முரசு புயலை தொடர்ந்து அடுத்தடுத்து உருவாகும் காற்றழுத்த தாழ்வு மண்ட லங்கள் புயலாக உருமாறி தமிழ் நாட்டை நோக்கி வரும் என்றார்.

குறிப்பாக நவம்பர், டிசம்பர் மாதங் களில் அதிக அளவில் தாழ்வு மண்ட லங்கள் உருவாகும். நவம்பர் 15ஆம் தேதி வாக்கில் புயல் உருவாகி தமிழ் நாட்டை நோக்கி வரும். மேலும் தீபா வளியின் போது தமிழகத்தில் மழை பெய்யும் என்றும் வானிலை மைய இயக்குனர் துரை குறிப்பிட்டார்.

பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒன்றிய அரசு இழைத்திருக்கும் அநீதியை அம்பலப்படுத்தும் சான்றுகள்!

'நீட்' தேர்வு எனும் சூழ்ச்சியை ஒழித்துக்கட்டும் வரை நமக்கு ஓய்வில்லை!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, நவ.3- திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீர மணி அவர்கள் விடுத் துள்ள அறிக்கையில் "மாநிலப் பாடத்திட்டத் தில் பயிலும் 90 சதவிகித மாணவர்களுக்கான சமூக அநீதி! வெறும் 10 சதவிகிதம் படிக்கும் சி.பி. எஸ்.இ. மாணவர்களுக்கு 56% மருத்துவ இடங் களா? ஆதாரப்பூர்வ மாகக் கிடைத்திருக்கும் சான்றுகள், பிற்படுத்தப் பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒன் றிய அரசு இழைத்திருக் கும் அநீதியை அம்பலப் படுத்துகின்றன! நீட் தேர்வு என்னும் சூழ்ச் சியை ஒழித்துக்கட்டும் வரை நமக்கு ஓய் வில்லை!" என்று குறிப் பிட்டுள்ளார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மருத்துவக் கல்லூரி யில் சேர்வதற்கு 'நீட்' நுழைவுத் தேர்வு ஒன்றிய அரசால் திணிக்கப்பட் டது முதலே, அது ஒடுக் கப்பட்ட, பிற்படுத்தப் பட்ட, கிராமப்புற மாண வர்களுக்கான வாய்ப்பை யும்; தமிழ்நாட்டின் பாடத்திட்டத்தில் பயி லும் மாணவர்களின் வாய்ப்பையும் பறிக்கும் என்பதை எச்சரித்துக் கொண்டே வந்திருக்கி றோம். மாநிலப் பாடத் திட்டங்களை ஒழித்து, ஒன்றிய அரசின் கட்டுப் பாட்டில் கல்வியைக் கொண்டு வருவதற்கான உள்நோக்கத்துடன் சி.பி. எஸ்.இ. பாடத் திட்டத் தின் அடிப்படையிலேயே கேள்விகள் அமைத்து, தேர்வுகள் நடத்தப்படுவ தையும், அதிலும் தனி யார் பயிற்சி மய்யங் களுக்கான அவசியத்தை உருவாக்கியிருப்பதை யும் நாமும், நீட்டை எதிர்க்கும் சமூகநீதியா ளர்களும், கல்வியாளர் களும் எச்சரித்துக் கொண்டே இருந்தோம்.

'நீட்'டை ஒழிக்க பரப்புரை செய்கிறோம்; போராடுகிறோம்!

அதன் விளைவு முதல் இரண்டு ஆண்டுகளில் வெளிப்படையாகத் தெரிந்தபோது, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இடஒதுக்கீட்டை வழங்கியதன் மூலம் அதைச் சரி செய்துவிட்ட தாகவும், மாநிலப் பாடத் திட்ட மாணவர்கள் நீட் தேர்வுக்குத் தயாராகிவி டுவார்கள் என்றும் சமா தானம் சொன்னார்கள். ஆனால், தொடர்ந்து மாணவர்கள் பாதிக்கப் பட்டு வருவதையும், ஆதாரப் பூர்வமாக, இந்த அநீதி அம்பலப்பட் டிருக்கிறது. எதற்காக 'நீட்'டைத் திணித்தார் களோ, அதை இப்போது அநீதியாக ஒன்றிய அரசு சாதித்திருக்கிறது. சி.பி. எஸ்.இ-க்கான முக்கி யத்துவம் என்பது பல நோக்குகளில் ஆபத்தா னது.



மோசமான பாகுபாட் டுக்கு அவர்கள் ஆளாகியி ருப்பதையும் கடந்த 10 ஆண்டுகளாக நாம் பார்த்து வருவதால்தான், அதை எதிர்த்துத் தொடர்ந்து இயக்கம் நடத்தி வருகிறோம். 'நீட்'டை ஒழிக்க வேண் டுமென்று பரப்புரை செய்கிறோம்; போராடு கிறோம்.

நாம் எதற்காக அஞ்சி னோமோ, எத்தகைய சமூக அநீதி நிகழ்ந்துவிடக் கூடாது என்று எச்சரித் தோமோ, அதுதான் நடந் திருக்கிறது என்பதை, நீட் தேர்வுக்குப் பிறகு மருத்துவச் சேர்க்கையில் ஏற்பட்டுள்ள தலைகீழ் மாற்றத்தைத் தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்கு நரகத்திடமிருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டத் தின் கீழ் பெறப்பட்டுள்ள தரவுகள் தெளிவாகக் காட்டுகின்றன:

நீட் என்னும் சூழ்ச்சியை அம்பலப்படுத்தியது!

2010 முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், தமிழ் நாட்டில் மருத்துவப் படிப்பில் சேர்ந்த சிபி எஸ்இ மாணவர்களின் எண்ணிக்கை ஒரு சதவீ தத்திற்கும் குறைவாகவே இருந்ததும், (2014-2015 இல் வெறும் 2 மாணவர் கள்; 0.06%), நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்ட தற்குப் பிறகு அது, திடீ ரென 2017-2018 ஆம் கல்வி ஆண்டில் 25.58% ஆக உயர்ந்ததும் நீட் என் னும் சூழ்ச்சியை அம்ப லப்படுத்தியது.

ஆனால், சிபிஎஸ்இ மாணவர்களின் ஆதிக்கம் பெருமளவில் அதிகரித்து, 2024-2025 ஆம் ஆண்டில் 55.51% ஆகவும் (4,677 மாணவர்கள்), 2025-2026 ஆம் ஆண்டில் 56.33% ஆகவும் (5,134 மாணவர் கள்) மாறியிருகிறது என் றால், நீட்டுக்கு முன்பு வரை 95% இடங்களுக் கும் மேல் இடம்பெற்று வந்த மாநிலப் பாடத்திட் டத்தில் பயிலும் அரசு, அரசு உதவி பெறும், தனி யார் பள்ளிகள் அனைத் துமே ஒட்டுமொத்தமாக, எவ்வளவு கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார் கள் என்பதற்கு இதை விட வேறு என்ன சான்று வேண்டும்?

இந்தியாவில் கல்வி என்பது மாநிலப் பட்டிய லில் இருந்து, ஒத்திசை வுப் பட்டியலுக்கு மாற் றப்பட்டதன் மூலம் தொடங்கிய பிரச்சினை, சி.பி.எஸ்.இ. (CBSE - Central Board of School Education)க்குச் சிறப்பிடம் தரு வதன் மூலமும், அதில் படித்தவர்கள் மேல்படிப் புகளுக்குச் செல்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்கு வதன் மூலமும், தற் போது மாநிலப் பாடத் திட்டங்களை ஒழித்து, பெற்றோரையும், பள்ளி களையும் சி.பி.எஸ்.இ-யின் பால் ஈர்த்துவிடலாம் என்பதற்கான சூழ்ச்சி இது.

கல்வித் துறையின் மீது ஆதிக்கம் செலுத்த ஒன்றிய அரசு முயல்கிறது!

நேரடியாக, பள்ளிக் கல்வியை ஒன்றிய அர சின் கட்டுப்பாட்டுக்கு, ஒன்றியப் பட்டியலுக்குக் கொண்டு செல்வது என் பது இந்திய அளவில் பெரும் பிரச்சினையாக அமையும் என்பதால், இத்தகைய குறுக்குவழி களில் கல்வித் துறையின் மீது ஆதிக்கம் செலுத்த ஒன்றிய அரசு முயல்கிறது.

சி.பி.எஸ்.இ. என்பது தற்போதைய சூழலில் ஆர்.எஸ்.எஸ்.சின் கல் வித் திட்டத்தை, காவிக் கொள்கையை உள்செ லுத்துவதற்கான 'பைப் லைன்' (குழாய்த் தடம்). மிக எளிதில், கல்வித் துறையின் வழியாகவே தங்களின் செயல்திட் டத்தை நடைமுறைப்ப டுத்த முடியும் என்று கரு துகிறது பா.ஜ.க.! வெகு எளிதாக ஹிந்தியை, சமஸ்கிருதத்தைத் தமிழ் நாட்டு மாணவர்கள் மீது திணித்து, நமது இரு மொழிக் கொள்கையை ஒழித்துவிட முடியும் என்று கனவு காண்கிறது பா.ஜ.க.!

எப்படி பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?

ஆதிக்கத்துக்கு ஆதிக் கம், அதன் வழியாக பிஞ்சு நெஞ்சில் நஞ்சு விதைப்பு, மொழி-பண் பாட்டுப் படையெடுப்பு, மருத்துவக் கல்லூரி, அடுத்தடுத்து பிற கல்லூரி களில் இடங்கள் பறிப்பு என்று பல வகை ஆபத்து களை உள்ளடக்கியதே இந்தச் சூழ்ச்சி! இதை எப்படி பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?

நீட் ஒழிப்புக்காக ஏன் நாம் தொடர்ந்து போரா டுகிறோம் என்றால், தேசி யக் கல்விக் கொள்கை கூடாது என்று ஏன் நாம் தொடர்ந்து போராடுகி றோம் என்றால் இவற்றுக் காகத் தான்! ஒரு 'தர்மேந் திர பிரதான்' பதவி விலகியதைக் காட்டி, 'நீட்'டுக்கு எதிரான போராட்டங்களை மடைமாற்றி ஏமாற்றி விட்டதாக ஆர்.எஸ்.எஸ். சும் - பா.ஜ.க.வும் கனவு காண முடியாது.

தமிழ்நாடு - பெரியார் மண்! அது ஒரு போதும் இத்தகைய ஏமாற்று வித் தைகளுக்குப் பலியா காது. மாநிலப் பாடத் திட்டத்தில் பயிலும் 90 சதவிகித தமிழ்நாட்டு மாணவர்களுக்கான வாய்ப்பைச் சூழ்ச்சியின் மூலம், அதிகாரத்தின் மூலம், சட்டவிரோதமா கப் பறிக்கும் இந்த அநீ தியை மக்கள் மத்தியில் ஆதாரப்பூர்வமாக எடுத் துச் செல்வோம்.

மக்களை, அறவழியிலான உரிமைப் போராட்டத்துக்கு ஆயத்தப்படுத்துவோம்!

ஒன்றிய அரசின் சட் டத் திருத்தங்கள், ஆசை காட்டுதல்கள், கல்வி நிறு வன அதிபர்களுக்கான மறைமுக மிரட்டல்கள் மூலம் தான் பல பள்ளி கள் கடந்த 10 ஆண்டுக ளில் பல தனியார் பள்ளி கள் சி.பி.எஸ்.இ. கல்வி முறையைத் தேர்ந்தெடுத் துள்ளன. அதன் மூலம் தான் 10 சதவிகிதம் என் னும் அளவுக்கு சி.பி. எஸ்.இ. பயிலும் மாண வர்கள் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. அந்த 10 சதவிகித மாணவர்க ளுக்கு 56% வரை நீட் தேர்வின் மூலம் மருத்து வக் கல்வி இடங்கள் போய்ச் சேர்ந்துள்ளன என்றால், இதில் எங்கே இருக்கிறது சமூக நீதி? அதனை எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டு மக்களை, அறவழியி லான உரிமைப் போராட் டத்துக்கு ஆயத்தப்படுத் துவோம்.

நீட் தேர்வை ஒழிக்கும் வரை எமக்கு ஓய்வில்லை!

நாடு தழுவிய அளவில் இப் பிரச்சினையைப் பிரச்சாரம், ஆர்ப்பாட் டங்களின் வழியாக திரா விட மாணவர் கழகத் தோழர்கள் எடுத்துச் செல்வார்கள். சமூகநீதி யைக் காக்க, நீட் தேர்வை ஒழிக்கும் வரை எமக்கு ஓய்வில்லை! ஓய்வில்லை!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஓரத்தநாடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தஞ்சை மத்திய மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினருமான

வழக்கறிஞர் எம்.இராமச்சந்திரன் மறைவு !

கழக நிர்வாகிகள் நேரில் அஞ்சலி

தஞ்சாவூர், டிச.3- முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தஞ்சை தெற்கு மாவட்ட தலைமை செயற்குழு உறுப்பினரும், வழக்கறிஞருமான எம். இராமச்சந்திரன் (வயது 88), நேற்று (02.11.2016 திங்கட் கிழமை) காலை 9.30 மணிய ளவில் மாரடைப்பால் மறை வெய்தினார் என்பதை அறி விக்க வருந்துகிறோம்.

மறைந்த எம்.இராமசந் திரன் அவர்கள் தீவிர கழக பற்றாளர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறி ஞர் கலைஞர், கழகத் தலை வர் மு.க.ஸ்டாலின் ஆகி யோர் மீது பெருமதிப்பும் பற்றும் கொண்டவர். இவர் கலைஞர் அவர்களின் மீதுள்ள பற்றால் மாணவர் தி.மு.கவில் இணைந்து இந்தி எதிர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்டவர். இவ ரின் கழகப் பணிகளை மெச்சி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திரு வோணம் தொகுதியில் வாய்ப்பளித்து 1989 மற்றும் 1996ல் இரண்டு முறை சட்ட மன்ற தேர்தலில் போட்டி யிட்டு வெற்றி பெற்றார்.

பின்னர் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்ட மன்ற தேர்தலில் வெற்றி பெற்றார். மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றி தொகுதி மக்க ளின் பெரும் அன்பை பெற் றவர்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்த தஞ்சை மத் திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம். எல்.ஏ. மற்றும் கழக நிர்வா கிகள் தஞ்சை நாஞ்சிக் கோட்டை சாலை, குறிஞ்சி இல்லத்திற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். இன்று (03.11.2026) காலை 11.00 மணியளவில் அவரது சொந்த ஊரானபின்னையூர் கிராமத்தில் இறுதி சடங்கு கள் நடைபெற உள்ளது.